## சென்னையில் இரண்டாவது கட்ட மகளிர் உரிமைத் தொகை விரிவாக்கம் தொடக்கம்:

# குடும்பத் தலைவிகளின் உழைப்பை இந்திய வரலாற்றிலேயே முதன்முதலாக அங்கீகரித்த அரசு நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை!

**சென்னை,டிச.14–**

**சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில், ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ ‘தமிழ்நாட்டின் சாதனைப் பெண்களின் மாபெரும் வெற்றி கொண்டாட்டம்’ நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் இரண்டாவது கட்ட விரிவாக்கத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இவ்விழாவில் கலந்துகொண்டு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.**

**அப்போது அவர் “குடும்பத் தலைவிகளின் உழைப்பை, இந்திய வரலாற்றிலேயே முதன்முதலாக அங்கீகரித்த அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:**

*முதலமைச்சர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டு மகளிரின் முன்னேற்றத்திற்காக மற்றுமொரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாளில் உங்கள் எல்லோரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன்.*

### மகளிர் முன்னேற்றம்

*திராவிட மாடல் அரசு என்றாலே, அது பெண்களுக்கான அரசு என்று தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பெண்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஆண்கள் மட்டுமல்ல, இன்றைக்கு ஒட்டுமொத்த இந்திய ஒன்றியமே இப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு திட்டத்தைக் கொண்டு வரும்போதும், அதில் மகளிர் முன்னேற்றத்தை மனதில் வைத்து ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறார்.*

*இன்று பெண்கள் பல துறைகளில் முன்னேறி வருவதையும், சாதிப்பதையும் பார்க்கும்பொழுது, நாம் ஒவ்வொருவரும் பெருமையோடு சொல்லலாம், இதுதான் எங்கள் தமிழ்நாடு, இதுதான் எங்கள் தமிழ்ப் பெண் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளும் அளவுக்கு நம்முடைய மாநிலம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.*

*இன்று பெண் உரிமையில் இந்தியாவுக்கே தமிழ்நாடுதான் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் மற்ற மாநிலங்கள் எல்லாம் பெண்களுக்கு உரிமையைத் தர வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தபோது, உங்களுக்கு உரிமை என்பதைத் தாண்டி அதிகாரத்தைக் கொடுத்திருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு, நம்முடைய திராவிட மாடல் அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.*

*தந்தை பெரியாரிடம் ஒருமுறை நீங்கள் பெண் உரிமையைப் பற்றிப் பேசுகிறீர்களே, பெண்களுக்கு என்னென்ன உரிமைகளைக் கொடுக்க வேண்டும் என்று ஒருவர் கேட்டார். அதற்கு பெரியார் மிக எளிதாக சொன்னார். ஆணுக்கு என்னென்ன உரிமைகள் இருக்கிறதோ, அவை எல்லாமே பெண்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று சொன்னார் பெரியார். பெண் அடிமைத்தனம் ஒழிய வேண்டும் என்றால், இரண்டு விஷயங்கள் முதலில் நடக்க வேண்டும் என்று சொன்னார் பெரியார்.*

### கல்வியும் வேலையும்

*ஒன்று, பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வேண்டும், இன்னொன்று பெண்களுக்குக் கல்வியும், வேலையும் கிடைக்க வேண்டும் என்று சொன்னார். இந்த இரண்டையும் செய்து காட்டிய பெருமை கழக அரசிற்கு உண்டு.*

*1989-ஆம் ஆண்டு இந்தியாவிலேயே பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சம உரிமை உண்டு என்று சட்டம் கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இந்தியாவிலேயே முதன்முதலாக மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தொடங்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இந்தியாவிலேயே முதன்முதலாகப் காவல்துறையில் பெண்களை நியமனம் செய்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அவர் வழியில், நம்முடைய முதலமைச்சர் அவர்களும், இன்றைக்குப் பெண்களுக்கான பல அடுக்கடுக்கான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்.*




*2021-ஆம் ஆண்டு, தான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அன்றே அவர் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணத் திட்டத்திற்கான கையெழுத்து. முன்பெல்லாம் வேலைக்குப் போவது, ஆண்களுடைய விஷயமாகவே இருந்தது. ஒரு வீட்டில் வேலை செய்பவர்தான், அந்தக் குடும்பத்துடைய ஆண்களாக மட்டுமே இருப்பார்கள். பெண்களுக்கு வீட்டு வேலை செய்வதுதான் மிக முக்கியமான ஒரு வேலையாக இருக்கும். மிக முக்கியமான ஒரு பொறுப்பாக இருக்கும். இதற்கு ஒரு பழமொழியும் உண்டு. அதுதான் உத்தியோகம் புருஷ லட்சணம் என்று சொல்வார்கள்.*

### பெண்களுக்கும் லட்சணம்

*உத்தியோகம் புருஷனுக்கு மட்டும் லட்சணம் கிடையாது, இன்று உத்தியோகம் பெண்களுக்கும் இலட்சணம் என்பதை மாற்றிக் காட்டிய அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு. அதனால்தான் இன்று இந்தியா முழுவதும் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கிற பெண்களில் 43 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்கள் என்ற பெருமையோடு நம்முடைய மாநிலம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.*

*குடும்பத் தலைவிகளின் உழைப்பை இந்திய வரலாற்றிலேயே முதன்முதலாக அங்கீகரித்த அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு. நம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த அந்த முற்போக்கான திட்டத்திற்குப் பெயர்தான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்த இந்தத் திட்டத்தை இன்று பல மாநிலங்கள் அதைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மாநிலங்கள் எல்லாம் இதை உரிமைத் தொகை என்று சொல்லவில்லை. தமிழ்நாடு மட்டும்தான் உதவித்தொகையாகப் பார்க்காமல், சலுகைத் தொகையைப் பார்க்காமல், பெண்களின் உரிமையாக இந்தத் திட்டத்தைப் பார்த்தது.*

*இப்போது ஏற்கெனவே இருந்த விதிகளையெல்லாம் தளர்த்தி, கூடுதலான மகளிருக்கு பயனளிக்கின்ற வகையில் இந்தத் திட்டத்தை இன்றிலிருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விரிவுபடுத்தி இருக்கிறார்.*

*இதுமட்டுமில்லாமல் புதுமைப் பெண் திட்டம், முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், தாயுமானவர் திட்டம், தோழி விடுதிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகளிருக்கான ஏராளமான திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார்.*

*விளையாட்டுத் துறையிலும் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் தமிழ்நாட்டு வீராங்கனைகள் இன்று தொடர்ந்து சாதனைகளைப் படைத்துக் கொண்டு வருகிறார்கள். அதற்கு ஒரு சிறந்த உதாரணம்தான் இங்கே மேடையில் உங்கள் முன் அமர்ந்திருக்கக் கூடிய என்னுடைய தங்கை துளசிமதி முருகேசன் அவர்கள்.*

*காஞ்சிபுரத்தில் ஓர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த மாற்றுத்திறனாளிதான் தங்கை துளசிமதி அவர்கள். தன்னுடைய தன்னம்பிக்கையாலும், விடாமுயற்சியா லும் இன்று உலக அளவில் பாரா பேட்மின்டனில் பல்வேறு சாதனைகளைத் தொடர்ந்து படைத்துக் கொண்டு வருகிறார் தங்கை அவர்கள். சமீபத்தில் பாரீசில் நடந்த பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்று, இன்று தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்த தங்கைதான் துளசிமதி முருகேசன் அவர்கள். அதன் மூலமாக பாரா ஒலிம்பிக்கில் இறுதிப் போட்டிவரைக்கும் சென்ற முதல் இந்திய பாரா பேட்மின்டன் வீராங்கனை என்ற பெருமை அவர்களைச் சேரும். அதுமட்டுமல்ல, நம்முடைய அரசு சார்பாக, சமீபத்தில் கல்பனா சாவ்லா விருதையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தங்கைக்குக் கொடுத்திருந்தார்கள்.*

*மாற்றுத்திறனாளி என்பதைத் தாண்டி பலரின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் அளவுக்கு தங்கை துளசிமதி நம் அனைவருக்கும் ஒரு முன்மாதிரி, ஒரு இன்ஸ்பிரேஷன். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேமாதிரி இந்த விழாவில் மரியாதைக்குரிய சமூக சேவகி பத்மஸ்ரீ கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் அவர்கள் வந்திருக்கிறார்கள். 11 வயதில் தன்னுடைய சமூகப் பணிகளைத் தொடங்கிய அம்மையார் அவர்கள், இன்றைக்கு 101 வயதையும் தாண்டிய நிலையிலும், தனது களப் போராட்டத்தில் அதே உறுதியோடு நிற்கிறார். குறிப்பாக, களப் போராட்டம், சட்டப் போராட்டம் மூலமாகப் பல்லாயிரம் ஏக்கர் நிலத்தை ஒடுக்கப்பட்டோர், மகளிர் பெயரில் பெற்றுத் தந்த பெருமைக்குரியவர்தான் அம்மையார் அவர்கள்.*

*இந்தியாவில் எந்த மூலையில் ஒடுக்கப்பட்ட மக்கள், மகளிர் பாதிக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் சென்று அவர்களின் உரிமைகளை இன்றும் நிலைநாட்டி வருகிறார். அம்மையார் கிருஷ்ணம்மாள் ஜெகநாதனின் பணிகள் நிச்சயம் நம் அனைவரையும் வழிநடத்தும் என்ற நம்பிக்கை இருக்கிறது.*

*இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன். வந்திருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள் அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களையும், அண்ணன் சேகர் பாபு அவர்களையும், வணக்கத்துக்குரிய மேயர் சகோதரி பிரியா ராஜன் அவர்களையும், வந்திருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு உள்ளிட்ட அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தம், ஐ.ஏ.எஸ்., அனைத்து அரசு அதிகாரிகளையும், மதிப்புக்குரிய துணை மேயர் அண்ணன் மகேஷ் குமார் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும், சமூக சேவகர் கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் அவர்களையும், தங்கை துளசிமதி முருகேசன் அவர்களையும், நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தங்களின் கருத்துகளை எல்லாம் இங்கே பகிர்ந்துகொண்ட பயனாளிகள், திரையுலகைச் சேர்ந்த என் நண்பர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் அத்தனை பேரையும், என் அன்புக்கும், பாசத்திற்கும் உரிய அருமை தாய்மார்களையும், சகோதரிகளையும், பத்திரிகை நண்பர்கள் உங்கள் அத்தனை பேரையும் வருக, வருக என அன்போடு வரவேற்று விடைபெறுகின்றேன். நம்முடைய திராவிட மாடல் அரசின் திட்டங்களால் வெல்லும் தமிழ்ப் பெண்கள் இன்னும் பல உயரங்களைத் தொட என் அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.*

*இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.*

> **“ நம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த அந்த முற்போக்கான திட்டத்திற்குப் பெயர்தான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்த இந்தத் திட்டத்தை இன்று பல மாநிலங்கள் அதைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மாநிலங்கள் எல்லாம் இதை உரிமைத் தொகை என்று சொல்லவில்லை. தமிழ்நாடு மட்டும்தான் உதவித்தொகையாகப் பார்க்காமல், சலுகைத் தொகையைப் பார்க்காமல், பெண்களின் உரிமையாக இந்தத் திட்டத்தைப் பார்த்தது. “**

---

## ஒன்றிய அரசால் நடத்தப்படும் மருந்தகங்களில்

# தரமற்ற மருந்து விற்பனை உள்ளிட்ட தவறுகளைத் தடுக்க எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

### நாடாளுமன்றத்தில் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!



*புதுடெல்லி, டிச.14-*

*நாடாளுமன்றத்தில் ஒன்றிய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சருக்கு கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. பல கேள்விகளை எழுப்பியுள்ளார். அதில், ஒன்றிய அரசால் நடத்தப்படும் ஜன் ஔஷதி கேந்திரா மருந்தகங்கள் மூலம் வழங்கப்படும் மருந்துகளின் தரம் மற்றும் மருந்து கிடைப்பதில் ஏற்பட்டுவரும் நெருக்கடி குறித்து மத்திய அரசுக்கு தெரியுமா? என கேட்டுள்ளார். மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் தரமற்ற மருந்துகள் வழங்கியதற்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை என்ன? எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளைத் தவிர்க்க தணிக்கை முறை உருவாக்கப் படுகிறதா? என்பன போன்ற கேள்விகளையும் எழுப்பியுள்ளார்.*

*அதன் விவரங்கள் வருமாறு:*

*நாடு முழுவதும் ஜன் ஔஷதி கேந்திரா மருந்தகங்கள் (JAKs) மூலம் வழங்கப்படும் மருந்துகளின் தரம் மற்றும் மருந்து கிடைப்பதில் ஏற்பட்டுவரும் நெருக்கடி குறித்து மத்திய அரசுக்கு தெரியுமா? தெரிந்திருந்தால் அதுகுறித்து பெறப்பட்ட புகார்களின் விவரங்கள் கண்டறியப்பட்ட விநியோகப் பற்றாக்குறைகள் என்ன?*

*கடந்த ஐந்து ஆண்டுகளில் பிரதம மந்திரி பாரதிய ஜன் ஔஷதி கேந்திரா திட்டத்தில் (PMBJP) அந்த மருந்தகங்களுக்கு எதிராக மாசடைந்த மருந்து கலவைகள் தரமற்ற மருந்துகள் வழங்கியதற்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை என்ன? ஆண்டு வாரியாக அதன் விவரங்கள் என்ன?*

*தரக் கட்டுப்பாடு சோதனை, திடீர் ஆய்வுகள், தரமற்ற மருந்து உற்பத்தியாளர்களைத் தடை செய்தல் மற்றும் தரமற்ற மருந்துகளைத் திரும்பப் பெறுவதற்கான காலக்கெடு உள்ளிட்ட கடுமையான தரக் கட்டுப்பாட்டை அமல்படுத்த மேற்கொள்ளப்பட்ட உறுதியான நடவடிக்கைகள் என்ன?*

*மருந்து கொள்முதல், விற்பனையாளர் தேர்வு மற்றும் இருப்பு வைத்தல் ஆகியவற்றில் ஒழுங்குமுறை மேற்பார்வை மற்றும் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?*

*எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளைத் தவிர்க்க சுதந்திரமான தணிக்கை முறை (Independent Audit Mechanism) உருவாக்கப்படுகிறதா? அப்படி இருப்பின், அதன் விவரங்கள் என்ன?*

*இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.*



மகளிரை மென்மேலும் முன்னேற வழிவகைச் செய்யும் நலத்திட்ட நாயகர் முதல்வர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி,நீலகிரி மாவட்டம் குன்னூர் வட்டம், கிரேஸ்ஹில், அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை (இரண்டாம் கட்டம்) விரிவாக்கத்தின் கீழ், தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், 3,402 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை நேற்று முன்தினம் (12.12.2025) வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா மற்றும் கே.எம்.ராஜு உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

---

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தொழிற்சங்க அங்கீகாரத் தேர்தல்

# தொ.மு.ச. மாபெரும் வெற்றி! தனிப்பெரும் சங்கமாகத் தேர்வு!

### பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிவிப்பு!



*சென்னை, டிச. 14 -*

*தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-*

*நமது நெஞ்சமெல்லாம் வாழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கி வரும் தொழிற்சங்கங்களில் முதன்மையான சங்கத்தை தேர்வு செய்ய தொழிற்சங்க அங்கீகாரத் தேர்தல் 10.12.2025 அன்று ரகசிய வாக்கெடுப்பு மூலம் தமிழ்நாடு முழுவதும் 51 வாக்குச் சாவடிகளில் நடைபெற்றது. நுகர் பொ ருள் வாணிபக் கழகத்தில் செயல்பட்டு வரும் எட்டு தொழிற்சங்கங்கள் தேர்தலில் போட்டியிட்டது.*

*14781 வாக்காளர்களில் 13018 பேர் வாக்கை செலுத்தியதில் 6699 பேர் (51.5 சதவிகிதம்) தொ.மு.ச. வின் இணைப்புச் சங்கமான தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியனுக்கு வாக்களித்து முதன்மைச் சங்கமாக தேர்வு செய்துள்ளனர். 51.5 சதவிகித வாக்குகள் பெற்றதன் மூலம் தொ.மு.சங்கம் அங்கீகாரத் தேர்தலில் தனிப் பெரும் சங்கமாக வெற்றி பெற்றுள்ளது.*

*நுகர்பொருள் வாணிபக் கழக அங்கீகாரத் தேர்தலில் அண்ணா தொழிற்சங்கத்திற்காக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியார் தனது கட்சியினரின் முழு பலத்தையும் பயன்படுத்தி வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தும் 15.7 சதவிகிதம் வாக்குகளை மட்டுமே பெற்று இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டது.*

*இந்தத் தேர்தல் வெற்றி முதல்வர் தளபதியார் அவர்கள் தலைமையின் மீது தொழிலாளர் வர்க்கம் முழு நம்பிக்கை வைத்துள்ளது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சி இரண்டாவது முறையாக 2026 சட்டமன்றத் தேர்தலில் பெறப்போகும் வெற்றிக்கு முன்னோட்டமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. அங்கீகாரத் தேர்தல் வெற்றியை திராவிட மாடல் ஆட்சியின் நாயகர், தொழிலாளர் வர்க்கத்தின் விடிவெள்ளி தளபதியார் அவர்களுக்கு காணிக்கையாக்குகின்றோம்.*

*அங்கீகாரத் தேர்தலில் வெற்றி பெற அயராதுழைத்த கழக நிர்வாகிகள், பேரவை நிர்வாகிகள், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் நிர்வாகிகள், இணைப்புச் சங்கங்களின் நிர்வாகி கள் மற்றும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியனைச் சேர்ந்த மத்திய சங்க, மண்டல சங்கங்களின் நிர்வாகிகள் ஆகியோருக்கும், தொழிலாளர் வர்க்கம் என்றும் தளபதியார் பக்கமே என்பதை வாக்களித்து நிரூபணம் செய்துள்ள வாக்காளர்கள் அனைவருக்கும் தொ.மு.ச. பேரவையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

---

## நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள

# பள்ளங்களைக் கண்காணிக்க ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்ன?

### மக்களவையில் ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி,டிச.14–

மக்களவையில் தருமபுரி எம்.பி. ஆ.மணி எழுப்பிய கேள்விகள் வருமாறு:–.

தமிழ்நாட்டின் வழியாக செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள பள்ளங்களால்,தருமபுரி மாவட்டத்தில் ஏற்பட்டு வரும் விபத்துக்களின் விபரங்கள் ஒன்றிய அரசுக்கு தெரியுமா? அப்படியானால் அந்த விபத்துகள் குறித்த விபரங்கள் என்ன?

கடந்த 3 ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் தருமபுரி மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்ற இது போன்ற விபத்துகள் எண்ணிக்கை என்ன?

தமிழ்நாடு முழுவதும் மாவட்ட வாரியாக தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பள்ளங்களால் ஏற்பட்ட விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதேனும் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா?இல்லை எனில் இழப்பீடு வழங்காததற்கான காரணம் என்ன?

தமிழ்நாடு முழுவதும் குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பள்ளங்களை தொடர்ந்து கண்காணித்து அடையாளம் காண ஒன்றிய அரசு ஏதேனும் வழிமுறையினை வகுத்துள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன? என்று சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் நிதின் ஜெய்ராம் கட்கரியிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

